அறிவிக்கப்பட்ட அனைத்து திட்டங்களும் தமிழகத்தில் முழுமையாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

25—

குடிநீர் சுத்திகரிப்பு நிலையம்

***29588—திரு. ஆர். சீனிவாசன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு நகரில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) ஆற்காடு நகரில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன் அவர்கள்.*

திரு. ஆர். சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி மாண்புமிகு*

2015 பிப்ரவரி 19]

அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு முதற்கண் என் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, ஆற்காடு நகரில் கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலை அமைத்துத் தர முடியுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், ஆற்காடு நகராட்சியின் தற்போதைய மொத்த மக்கள்தொகை 55,917 ஆகும். தற்போது ஆற்காடு நகரத்திற்கு, நகராட்சிக்குட்பட்ட தலைமை நீரேற்று நிலையம் அருகில் பாலாற்றுப் படுகையில் உள்ள நான்கு நீரூற்றுக் கிணறுகள் மூலம் நாள் ஒன்றுக்கு 5.48 மில்லியன் லிட்டர் குடிநீர் எடுக்கப்பட்டு, நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு 98 லிட்டர் வீதம் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. இந்த நீர் குடிப்பதற்கு உகந்ததாகவும், பாதுகாக்கப்பட்ட குடிநீராகவும் உள்ளதால், நேரடியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் ஏற்றப்பட்டு, விநியோகிக்கப்படுகிறது. இந்தக் குடிநீர் முறையாக குளோரினேஷன் செய்யப்பட்டு, இரண்டு நாட்களுக்கு ஒருமுறை சுழற்சி முறையில் பொது மக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. மேலும், பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப, பாலாற்றுப் படுகையிலிருந்து கூடுதலாக நீர் பெற இயலாததால், குடிநீர் மேம்பாடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, வேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் ஆற்காடு நகராட்சியும் இணைக்கப்பட்டுள்ளது. மேலும், இக்கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.1,295 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில், ஆற்காடு நகராட்சிக்குட்பட்ட விகிதாச்சார மதிப்பீட்டுத் தொகை 4.71 கோடி ரூபாய் ஆகும். வேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் ஆற்காடு நகராட்சிக்கு நாள் ஒன்றுக்கு 6.59 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன் அவர்கள்.

திரு. ஆர். சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல பதிலைக் கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.

திரு. கு. லிங்கமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதி கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றது. அங்கு குடிநீருக்காக தினமும் நான்கு போராட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமலுக்கு வரும்போது, ஊராட்சிகளுக்கும் அக்கூட்டுக் குடிநீர்த் திட்டம் விரிவாக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி நடைபெறும் அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக, ஊரகக் குடியிருப்புகளுக்குக் குழாய்கள் மூலமாக குடிநீர் வழங்குவதில், தமிழகம் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது.

இந்தியாவில் மற்ற அனைத்து மாநிலங்களிலும் உள்ள ஊரகக் குடியிருப்புகளுக்கு குழாய்கள்மூலம் 39.95 விழுக்காடு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இது மற்ற மாநிலங்களின் மொத்த விழுக்காடு ஆகும். ஆனால், மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக, தமிழகத்தில் 98.95 விழுக்காடு ஊரகக் குடியிருப்புகளுக்கு குழாய்கள் மூலமாக குடிநீர் வழங்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கையை, அவசியம் ஏற்படின், மாண்புமிகு அம்மா

2015 பிப்ரவரி 19]

அவர்களுடைய வழிகாட்டுதலின்படி நடைபெறும் அரசு கண்டிப்பாக பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 26, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.க. அரங்கநாதன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

26—

கால்நடைக் கிளை நிலையம்

***52416—திரு. ஆ.க. அரங்கநாதன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், விருதுவிலங்கினான் ஊராட்சியில் புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படுத்துக்கொண்டே ஜெயிப்பேன் என்று படுதோல்வி அடைந்த தலைவர்கள் எல்லாம் உண்டு. ஆனால், ஒரு கடிதத்திலேயே 96,500 வாக்குகளுக்கு மேலாக பெற்று, கழகத்தை வெற்றி பெறச் செய்த, (மேசையைத் தட்டும் ஒலி) அரசியல் வானின் ஒரே தலைவர் மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், விருதுவிலங்கினான் ஊராட்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் கால்நடை அலகுகள் 3,000–க்கும் அதிகமாக உள்ளதால், மேற்படி கிராமத்தில் புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக் கூறுகள் உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.